

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தலைமையிலான பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய இடைக்கால குழுவின் (Adhoc Committee) ஒத்துழைப்புடன் ஜம்முகாஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் என்.பால் வசந்தகுமார் மேற்பார்வையில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், உத்தரவிற்கிணங்க சென்னை, மெரினா கடற்கரையில் 300 வியாபாரிகளுக்கான கடைகள் ஒதுக்கீட்டிற்கான குலுக்கல் ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில், நேற்று முன்தினம் (12.02.2026) காலை 10 மணிக்கு துவங்கி, நடைபெற்றது.



தலைமைச் செயலகத்தில் நேற்று (13.02.2026) மனிதவள மேலாண்மை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் முன்னாள் படைவீரர் நலத்துறைக்கு புதியதாக தேர்வு செய்யப்பட்ட 8 நல அமைப்பாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அரசு கூடுதல் செயலாளர் கி. பாலசுப்பிரமணியம், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### உர ஆலைகள் மூடல் – இறக்குமதி இரண்டு மடங்கு உயர்வு – விலை உயர்வு அபாயம்!

# மோசமான நிர்வாகத்தால் விவசாயிகளை பாதிப்புக்குள்ளாக்கும் ஒன்றிய அரசு!

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.14-

உர ஆலைகள் மூடல்; இறக்குமதி இரண்டு மடங்கு உயர்வு; விலை உயர்வு அபாயம். மோசமான நிர்வாகத்தால் விவசாயிகளை பாதிப்புக்கு உள்ளாக்கும் ஒன்றிய அரசுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் உர இறக்குமதி பன்மடங்கு அதிகரித்து விலை உயர்வு அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயிகளை பாதுகாக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள் பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பற்றிய கவலையையும் அதிகப்படுத்தியுள்ளது.

1. இரண்டு மடங்கு அதிகரித்த உர இறக்குமதி; 'ஆத்மநிர்பார்' முழக்கங்கள் வெறும் ஏமாற்று!

நாடாளுமன்றத்திலும், மேடைகளிலும் 'ஆத்மநிர்பார் பாரத்' என்று முழங்கி வருகிறது ஒன்றிய அரசு. ஆனால், நடைமுறையை எடுத்துப் பார்த்தால், வேளாண் நாடாக அறியப்படும் நம் நாட்டை மிக அடிப்படைப் பொருளான உரத்திற்கு வெளிநாடுகளிடம் கையேந்த விட்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் தரவுகளின் படி, 2024-25 ஏப்ரல் முதல் நவம்பர் வரை, 32.55 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் உர (Urea) இறக்குமதி, நடப்பு ஆண்டான 2025-2026ல் 71.71 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இது 120% அதிகம் மற்றும் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வு.

2. மூடப்படும் உள்நாட்டு உர ஆலைகள்; ஆனால், ஒன்றிய அரசு மௌனம்!

காக்கிநாடா, கான்பூர் போன்ற இடங்களில் உள்ள முக்கியமான உர ஆலைகள் மூடப்பட்டதே உள்நாட்டு உற்பத்தி குறையக் காரணம் என்று ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்குப் பின்னணியாக, நிறுவனங்களின் நிதி நெருக்கடி மற்றும் நிர்வாகப்பிழையை கூறியுள்ளது.

இரண்டு கேள்விகள் மக்கள் மனதில் உதிக்கின்றன. ஒன்று, அவற்றை முக்கியமான ஆலைகள் என்று குறிப்பிடும் ஒன்றிய அரசு, ஏன் அந்த ஆலைகளை மீட்டெடுத்து உற்பத்தியைத் தொடர எந்தத் திட்டமும் வகுக்கவில்லை? இரண்டு, இறக்குமதியை அதிகரிப்பதற்காக உள்நாட்டு ஆலைகள் கவனிக்கப்படாமல் செல்கின்றனவா? விடப்பட்டு மூடும் நிலைக்குச்

இரண்டிலுமே ஒன்றிய அரசின் மெத்தனமும் மோசமான நிர்வாகமும் ஒளிந்திருக்கின்றன.

3. மானியம் என்பது சமாளிப்பு, உள்நாட்டு உற்பத்தியே தீர்வு!

உர ஆலைகளை மூட விட்டு விட்டு, இறக்குமதியை பன்மடங்கு அதிகரித்துக் கொண்டு, ஒரு போலி ஜம்பமாக உரங்களுக்கு மானியம் வழங்கப்படுவதை குறிப்பிட்டுள்ளது ஒன்றிய அரசு.

சந்தையில் விலையை சீராக வைக்க வேண்டுமானால், உள்நாட்டு உற்பத்தி அவசியம் என்பதை எந்த வல்லுநரும் கூறுவார்கள். அதில் கோட்டைவிட்டுவிட்டு, மானியம் வழங்குவதை உயர்த்திப்பேசி என்ன பயன்? எத்தனை நாளைக்கு மானியத்திலேயே வண்டி ஓடும்? இந்த உள்நாட்டு உற்பத்திப் பின்னடைவு, விரைவில் உரங்களின் விலை உயர்வாக வெடிக்கும் அபாயம் கொண்டது.

ஒன்றிய அரசு 'ஆத்மநிர்பார்' என்று விளம்பரம் செய்து ஊரை ஏமாற்றுவதை நிறுத்திவிட்டு, உள்நாட்டு ஆலைகள் மூடப்படுவதை தடுத்து நமது உர உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும்.

### மாதிரி கிராம மேம்பாட்டுத் திட்டத்திற்கு

# ஒன்றிய அரசு போதிய நிதியுதவி அளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி,பிப்.14-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 10 பிப்ரவரி 2026 அன்று மக்களவையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிரி கிராம மேம்பாட்டு திட்டத்திற்கு, ஒன்றிய அரசு போதுமான நிதியுதவி அளித்து வருகிறதா? என்றும், கடந்த ஐந்தாண்டுகளில், தமிழ் நாட்டிற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது? என்றும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதா? என்றும், எவ்வளவு கிராமங்களில், மாதிரி கிராம மேம்பாட்டு



திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு கிராமப்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மாண்புமிகு கிராமப்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை 1440 கிராம பஞ்சாயத்துகளில் 35 மாநிலங்களில் மாதிரி கிராம மேம்பாடு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சிக்கு நிதியுதவி லிருந்தும், சட்டசபை உறுப்பினர் வளர்ச்சி நிதியுதவிலிருந்தும் இத்திட்டத்தின் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது என்றும், சட்டசபை உறுப்பினர்களின் வளர்ச்சி நிதி அந்தந்த மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது என்றும், தமிழ்நாட்டில் 158 மாதிரி கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஒன்றிய அரசின் கிராமப்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### என்,எஸ், பாலசுப்பிரமணியன் தலைமை! தட்சன் ஹரிஹரன் முன்னிலையில் – சென்னை

# தென்மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் பொங்கல் விழா - முதல்வர் பிறந்த நாள் 600 பேருக்கு பரிசுகள்!

## மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை – பழ.செல்வகுமார் வழங்குகின்றனர்!

சென்னை, பிப்:14-

சென்னை தென்மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில், நடந்த பொங்கல் விழா மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு,கோலப் போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்க்கு பரிசளிப்பு வழங்கும் நிகழ்ச்சி இன்று (14.2.2026 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் 130 அ,வட்டம் வடபழனி என்.ஜி.ஓ காலனியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் என். எஸ்.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ, பகுதி செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி,கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் பழ. செல்வகுமார் ஆகியோர் பங்கேற்று, முதல்வர் பிறந்த நாள் விழா மற்றும் பொங்கல் நிகழ்ச்சியில் கோலப் போட்டியில் வெற்றி பெற்ற மகளிர் 300 பேருக்கு 5 லிட்டர் குக்கர், ஆண்கள் 300 பேருக்கு ஸ்டீல் வாட்டர் பாட்டில் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இதில் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம். சி,கொ.சு.மணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.சி., தொகுதி பார்வையாளர் எஸ்.பாஸ்கர் எம்.சி, மா.யூகலிங்கம், டி.கமல், கே.ஸ். வெல்டிங் ராஜா,நா. மோ.முரளி,பி.மாரி, ஜெயக்குமார், லட்சுமி காந்தன்,மு.ம. செந்தில்குமார்,ஜி. பி. செந்தில், மு செல்வகுமார், லோகு, சாலி கே. மோகன், ஆர்.கே. முருகேஷ், சிவ சதீஷ், அ.பொன்னுதுரை,

எச்.வேலு ராணி, லோகேஷ், மாவட்ட சுற்றுச் அணி மாவட்ட தலைவர் மாரிச்சாமி,துணை செயலாளர் செந்தில் அய்யாவு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.ஹரி, நாராயணன்,வேதா,த. பத்மநாபன், துரைக்கண்ணு, விஷ்ணு சங்கர், சக்திவேல்,சார்லி, யுவராஜ்,வேல்ராஜ், வெங்கட்ராமன், சிவானந்தம்,சுற்றுச்சூழல் அணி தியாகராயர் நகர் மேற்கு பகுதி அமைப்பாளர் பா.புகழ்,துணை அமைப்பாளர்கள் பி. ஸ்ரீதர்,பி.குமணன் எஸ்.டி. தீபக், கோபால,எம்.பாலு, தா.தணிகைமலை, கே.வெங்கடேசன், கார்த்திகேயன்,ஜெ. மணிகண்டன்,

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அமைப்பாளர் ஆர். எல்.குமரன், துணை அமைப்பாளர்கள் பெ.ரஞ்சித்,எஸ். பிரேம்குமார், வெல்டிங் எஸ். ராமு, பி.எஸ்.மணி,டி.எம். ஜெயக்குமார், எஸ். பரமசிவம்,எம். புவனேஷ்குமார்,வ. மணிபாரதி,ஏ.பாலு, மயிலாப்பூர் மேற்கு பகுதி அமைப்பாளர் ஜி செந்தில், துணை அமைப்பாளர்கள் சு. தமிழ், என். துளசிங்கம், எஸ். விஸ்வநாதன், எம்.வெங்கடேசன்,வி. சுந்தர், கே. மாணிக்கம் எம். சரவணன், ஜெ. முத்துகுமார், ஆர். கோபால், மயிலாப்பூர் கிழக்கு பகுதிஅமைப்பாளர் எஸ். ஜீவரத்தினம், துணை அமைப்பாளர்கள் ஆர். கே.முருகன், ஈ. தணிகாசலம், எஸ்.பிரசாந்து,தமின் ஏ. பெனிக்ஸ், மகிமை லூர்து சாமி,மணி கண்டன்,சந்துரு அப்துல் மத திப் சுகுமார்,

தியாகராயநகர் தொகுதி உட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக, அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு, விழாவினை சிறப்பிக்கின்றனர்.

பி.கோபிநாத்,சங்கர், அரசு ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

### செங்கோட்டை ஒன்றியம் – புதூர் பேரூராட்சியில் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தொகுதி நிதியில்

# குடியிருப்புகள் - அறிவுசார் நூலகக் கட்டடம் கட்டும் பணி!

## ரவிசங்கர் தலைமையில் ஜெயபாலன், கே.எஸ்.ரவிச்சந்திரன் அடிக்கல் நாட்டினர்!

தென்காசி, பிப். 14 -

தென்காசி மாவட்டம் செங்கோட்டை ஒன்றியம் புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பூலாங்குடியிருப்பு, மற்றும் தெற்குகதிரவன் காலனி, ஆகிய பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் திமுக சட்டத்துறை செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான, என்.ஆர். இளங்கோ அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பூலாங்குடியிருப்புக்கு தலா 46 லட்சமும் கதிரவன் காலடி பகுதியில் தலா 46 லட்சமும் மொத்தம் 92லட்சம் மதிப்பிலான அறிவுசார் நூலக மைய கட்டிடத்தில் அடிக்கல் நாட்டு விழா திமுக செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ரவிசங்கர் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஜெயபாலன், தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் எழும்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் இடம் நன்கொடையாளர் வி.சாகுல் ஹமீது மற்றும் அவர்களது மகன் எஸ். காதர் முகைதீன், துணைத் தலைவர் ஹக்கிமால் பானு, தங்கம் முத்துக்குமார், தனலட்சுமி, அருணாச்சலம், பிரேமா, கோபி ராம்ஜி, சரவணகுமார், மகேந்திரன், வைரமணி, ஆனந்தி, சவுரி, திருமலை குமார், ஈஸ்வரன், ருசி மைதீன், செங்கோட்டை ஒன்றிய பெருந்தலைவர் திருமலைச்செல்வி, செங்கோட்டை ஒன்றிய துணை பெருந்தலைவர் கலா குமாரசாமி, தலைமைக் கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ், தங்கராஜ் பாண்டியன், சுபசேகரன், புதூர் பேரூர் செயலாளர் கோபால், செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன், பழனிச்சாமி, கை கொண்டார் சீதாராமன், எஸ்.சி. கருப்பசாமி, நிர்மல், கிருஷ்ணராஜ், அந்தோணி, பாலமுருகன், கிழங்காடு ராமர், பாலு என்ற முத்துராமலிங்கம், குருமூர்த்தி, சீனு, பரமசிவம், ஆதிதிராவிடர் அணி தென்காசி மாவட்ட அமைப்பாளர் பூலாங்குடி இருப்பு, எம்.கே.பி. பள்ளி தாளாளர் முகைதீன் பிச்சை மற்றும் பள்ளி மாணவ மாணவியர் ஆசிரியர்கள் கவுன்சிலர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்

பிப்ரவரி 14 (2006)



வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்

பிப்ரவரி 14 (1985)



சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.

“ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.